[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 8

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2019) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2019), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.